பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07 08 2024 **WEDNESDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பல பகுதிகளில் நெசவாளர்களால் உருவாக்கப்படும் கைத்தறி ரகங்கள் வளமான பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் வெளிப்படுத்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. இரண்டாவது மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை அமைப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.
3. மணிப்பூர் மாநிலத்தின் பங்களாதேஷ் எல்லைப்பகுதி மாவட்டங்களில் ஊடுருவலை தடுக்க ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
4. சொத்துக்குவிப்பு வழக்கிலிருந்து மாநில அமைச்சர்கள் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் திரு. தங்கம் தென்னரசு ஆகியோரை விடுவித்து ஸ்ரீவில்லிப்புத்தூர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இரண்டு பதக்கங்களை வென்று, தாயகம் திரும்பியுள்ள மனுபாக்கருக்கு புதுதில்லி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

>>>><<<<

நாட்டின் பல பகுதிகளிலும் உற்பத்தியாகும் பல வண்ண கைத்தறி ரகங்கள், வளமான பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

10வது தேசிய கைத்தறி தினத்தை ஒட்டி, பிரதமர் இன்று வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டின் கைத்தறி நெசவாளர்கள், உள்நாட்டு உற்பத்திக்கு குரல் கொடுப்போம் என்ற உறுதிப்பாட்டுடன் செயல்பட்டு வருவது மிகவும் பெருமை அளிப்பதாக கூறியுள்ளார்.

தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு, புதுதில்லி விஞ்ஞான் பவனில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் பங்கேற்கிறார்.

விழாவில் கைத்தறித்துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய நெசவாளர்களுக்கு அவர் விருதுகளை வழங்கி கௌரவிக்கிறார்.

கைத்தறி பாரம்பரியம் தொடர்பான புத்தகம் ஒன்றையும் குடியரசு துணைத்தலைவர் வெளியிடுகிறார்.

மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் உள்ளிட்ட பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

>>>><<<<

இரண்டாவது மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை அமைப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாத் கூறியுள்ளார்

மக்களவையில் இதனை தெரிவித்த அமைச்சர், நாட்டில் இதுவரை 65 மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 57 பூங்காக்கள், இரண்டாவது மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கிராமப்புறங்களை தகவல் தொழில்நுட்ப நகரங்களுடன் இணைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

தகவல் தொழில்நுட்பத்துறையில் 54 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இவற்றில் 37 சதவீத பேர் மகளிர் என்றும் தெரிவித்தார்.

>>>><<<<

தேசியக்கவி ராவீந்திரநாத் தாகூரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

தேசியகீதத்தை இயற்றிய ரவீந்திரநாத் தாகூர், சமூக கல்விப் பணிகளுக்காக நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் சமூக மாற்றத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த பாடுபட்டவர் என்று கூறியுள்ளார்.

நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கு புத்துயிர் அளித்தவர் என்றும் அமைச்சர் புகழாரம் சூட்டியுள்ளார்.

மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி விடுத்துள்ள செய்தியில், இசை, கலை, இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் தாகூரின் பங்கு மகத்தானது என்று தெரிவித்துள்ளார்.

விடுதலைப்போராட்ட இயக்கத்திலும் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**>>>><<<<**

மணிப்பூர் மாநிலத்தின் பங்களாதேஷ் எல்லைப்பகுதி மாவட்டங்களில் நேற்றிரவு முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, அந்நாட்டவர் இந்தியப் பகுதிக்குள் நுழைவதற்கான சாத்தியக்கூறுகளை கருத்தில் கொண்டு, மணிப்பூரில் **Pherzawl, Jiribam** மாவட்ட எல்லைகளில் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் இந்த உத்தரவை மாவட்ட ஆட்சியர்கள் பிறப்பித்துள்ளனர்.

வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் உள்ளிட்ட பொருட்கள் இம்மாவட்ட பகுதிகளில் எடுத்துச் செல்லப்படுவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது.

**Jiribam** மாவட்டத்தின் ஒருசில பகுதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இந்த ஊரடங்கில் தளர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

திமுக முன்னாள் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான முு. கருணாநிதின் 6-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில், முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி பிரமுகர்கள் அமைதிப் பேரணியாக சென்று, மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

**>>>><<<<**

சொத்துக்குவிப்பு வழக்கிலிருந்து மாநில அமைச்சர்கள் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் திரு. தங்கம் தென்னரசு ஆகியோரை விடுவித்து ஸ்ரீவில்லிப்புத்தூர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

இதுதொடர்பாக நீதிபதி திரு. ஆனந்த் வெங்கடேஷ், இன்று பிறப்பித்த உத்தரவில், இரு அமைச்சர்களுக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய ஆரம்ப கட்ட முகாந்திரம் உள்ளதாக கூறியுள்ளார்.

எனவே, அவர்களை விடுவித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து தீர்ப்பளித்த நீதிபதி, இரு அமைச்சர்கள் சார்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

**>>>><<<<**

மூன்று நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது ஃபிஜி பயணத்தை முடித்துக் கொண்டு நியுசிலாந்து புறப்பட்டுச் சென்றார்.

இன்று நியுசிலாந்தின் ஆக்லாண்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

முன்னதாக ஃபிஜி அதிபர் திரு வில்லியம் **katonivere** அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திருமதி திரௌபதி முர்மு, இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகள் 75 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும், பல்வேறு துறைகளில் இது மேலும் வலுப்பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

**>>>><<<<**

நாகப்பட்டினத்திலிருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு பயணியர் கப்பலை மீண்டும் இயக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக ‘சிவகங்கை’ என்ற கப்பல், நாகை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் — செல்வன் 45 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

சேலம், கோட்டை மாரியம்மன் கோவில் ஆடித்திருவிழா எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 50 செகண்ட்ஸ்)

**>>>><<<<**

இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து பல்வேறு துறைகளில் கூட்டாக முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஆன்டனி பிளிங்கன் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. லாயிட் ஆஸ்டின் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க நாளேடு ஒன்றுக்கு இருவரும் கூட்டாக அளித்துள்ள பேட்டியில், செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர் உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்பட க்வாட் அமைப்பு மாநாட்டில் முடிவு செய்திருப்பதையும் கூட்டிக்காட்டியுள்ளனர்.

**>>>><<<<**

ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்ராகண்டில் அடுத்த நான்கு நாட்களுக்கு பரவலாக மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், மேற்கு உத்தரபிரதேசம், கிழக்கு மத்தியப்பிரதேசம் மற்றும் உத்ராகண்டில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், கிழக்கு உத்தரபிரதேசம், கிழக்கு ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர் உள்ளிட்ட பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழ்நாடு, கரையோர ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா மற்றும் கோவாவிலும் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இரண்டு பதக்கங்களை வென்று, தாயகம் திரும்பியுள்ள மனுபாக்கருக்கு புதுதில்லி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சக அதிகாரிகள் மற்றும் விளையாட்டு ரசிகர்கள் அவரை வரவேற்றனர்.

இன்று நடைபெறவுள்ள மல்யுத்த போட்டியின் 50 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் வினேஷ் போகத் இறுதிச்சுற்றில் பங்கேற்கிறார்.

பளுதூக்கும் போட்டியின் 49 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் மீராபாய் சானு பங்கேற்கிறார்.

டேபிள் டென்னிஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்திய அணி இன்று ஜெர்மனி அணியை எதிர்கொள்கிறது.

>>>><<<<